**08.03.2024–ந் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கையின் நகல்**

**தேவகோட்டை நகராட்சி.**
**அவசரக்கூட்டம்.**

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 08.03.2024–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

**பொருள் – 492**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள முளக்கொட்டு தெருவில் சாலை அமைத்து சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலான நிலையில் சாலை பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. சில நேரங்களில் பாதசாரிகள் தடுமாறி கீழே விழும் நிலை ஏற்படுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. இதனால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 492 – அனுமதிக்கப்பட்டது.**

––

**பொருள் – 493**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பழனி ஆண்டவர் கோவில் முன்புறம் சாலை அமைத்து சுமார் பல ஆண்டுகளுக்கு மேலான நிலையில் சாலை பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. இதனால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை

அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 493– அனுமதிக்கப்பட்டது.**

––

**<u>பொருள் – 494</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வாடியார் வீதி பகுதியில் உள்ள மீன் மார்கெட் அருகே கழிவுநீர் குளக்கால் செல்கின்றது. தினசரி மார்கெட் மற்றும் மீன் மார்கெட் அருகே உள்ளதால் மார்கெட்டிலிருந்து வெளியேறும் கழிவுகள் திறந்த நிலையில் உள்ள குளக்காலில் கலந்து துற்நாற்றம் வீசுகின்றது. மேலும் கழிவு நீர் செல்ல முடியாத நிலையில் குளக்கால் அடைப்பட்டு விடுகிறது. இதனால் குளக்காலில் கழிவு நீர் தேங்கி சுகாதார கேடு உண்டாகுவதால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மேற்காணும் இடத்தில் குளக்காலின் மேற்புறம் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 494– அனுமதிக்கப்பட்டது.**

––

**<u>பொருள் – 495</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட சோமசுந்தரம் நகர் குறுக்குத் தெருவில் சாலை அமைத்து சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலான நிலையில் சாலை பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. சில நேரங்களில் பாதசாரிகள் தடுமாறி கீழே விழும் நிலை ஏற்படுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. இதனால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 495– அனுமதிக்கப்பட்டது.**

––

**<u>பொருள் – 496</u>**

தேவகோட்டை நகராட்சி வார்டு எண்.K, பிளாக் எண்–1, சர்வே எண். 82/7, பரப்பளவு எண். 4251.80 ச.மீ பரப்பளவு இடத்தினை 17 மனைகள் அடங்கிய மனைப்பிரிவிற்கு பார்வை 2ல் காணும் சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துறையின் 09.02.2024 நாளிட்ட உத்தரவில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் KL.P (S.W.P) DT.CP/SIVAGANGAI No.12/2024 என எண்ணிட்ட கடிதம் வரப்பெற்றுள்ளது. மனைப்பிரிவு வரைபடத்தின் உத்தேச சாலைகளின் பரப்பளவு 793.11 ச.மீ உள்ளாட்சி உபயோக மனை 28.80 ச.மீ மற்றும் மின் வாரிய உபயோக மனை 28.80 ச.மீ ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பார்வை 3ல் காணும் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் மூலம் மனைப்பிரிவு சாலைகளுக்கான இடம் நகராட்சி உபயோக இடம் 28.80 சமீ ஆகியவற்றை ஒப்படைப்பு செய்துள்ளனர். நகராட்சி பொறியாளர் 07.02.2024 தேதிய நாளிட்ட குறிப்பில் மனைப்பிரிவில் தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைப்படத்தின்படி நகராட்சியால் குறிப்பிட்ட அளவிற்கும் மட்டத்திற்கும் மற்றும் விரிவான குறிப்புகள் படியும் தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் மின் கம்பங்களுடன் அமைக்க மதிப்பீட்டுத் தொகை தெரிவிக்க கோரி மின் வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் குறிப்பில் கொடுத்துள்ளனர். மனைப்பிரிவு உரிமையாளர் கடிதத்தில் அடிப்படை வசதிகளை மழைநீர் வடிகால்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் ஆகியவற்றை வீடுகள் கட்டப்படும் பொழுது அமைத்து தருவதாகவும் சம்மதம் தெரிவித்துள்ளனர். எனவே மேற்கண்ட மனைப்பிரிவு சாலையினை நகராட்சி சாலையாக ஏற்றுக்கொள்ளவும் மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 496– அனுமதிக்கப்பட்டது.**

––

**<u>பொருள் – 497</u>**

தேவகோட்டை நகராட்சியில் பொது நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 05.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்–1, சோமசுந்தரம் நகர் குறுக்குப் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 6.00 | 1) திரு. G விக்னேஷ் கண்ணா, தேவகோட்டை. | 0.09 % குறைவு |
| | | | 2) திரு. S. கணேசன், தேவகோட்டை. | 2.24 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | வார்டு எண்–12, விநாயகபுரம் குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.80 | 1) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 0.01 % குறைவு |
| | | | 2) திருமதி. G. சாந்தி, கோட்டையூர். | 0.52 % அதிகம் |
| 3. | வார்டு எண்–24, கொல்லங்குடியார் வீதி மற்றும் கைலாசநாதபுரம் பகுதியில் பேவர் பிளாக் கல்தளம் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | 9.90 | 1) திரு. K. மோஸஸ், காளையார்கோவில். | 0.01 % குறைவு |
| | | | 2) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 0.20 % அதிகம் |
| 4. | தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் சிசிடிவி கேமரா பொருத்துதல் பணி. | 2.00 | 1) திரு. P. பொன்ராஜ், தேவகோட்டை. | 0.01 % குறைவு |
| | | | 2) திரு. K. சுந்தர பாண்டியன், காரைக்குடி. | 1.50 % அதிகம் |
| 5. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட காட்டூரணி மற்றும் பெருமா கண்மாய் கரைகளில் புற்கள் அச்சு பதித்தல் பணி. | 9.50 | 1) திரு. P. பொன்ராஜ், தேவகோட்டை. | 0.01 % குறைவு |
| | | | 2) திரு. K. சுந்தர பாண்டியன், காரைக்குடி. | 4.49 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 497– அனுமதிக்கப்பட்டது.**

——

## பொருள் – 498

தேவகோட்டை நகராட்சியில் பொது நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 08.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்–3, மீனாட்சி அம்மன் நகர் பகுதியில் அமைந்துள்ள பூங்காவிற்கு சுற்றுசுவர் அமைத்தல் பணி | 9.00 | 1) AUGIMA ENGINEERING PRIVATE LIMITED, தேவகோட்டை. | 0.07 % குறைவு |
| | | | 2) KRM CONSTRUTION, தேவகோட்டை. | 1.81 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 498– அனுமதிக்கப்பட்டது.**

——

## பொருள் – 499

தேவகோட்டை நகராட்சியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 08.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்–1, இராம்நகர் பகுதியில் (சோமசுந்தரம் நகர்) புதிய போர்வெல் அமைத்தல் பணி. | 8.00 | 1) திரு. G. குழந்தைவேலு, தேவகோட்டை. | 0.02 % குறைவு |
| | | | 2) திரு. M. அழகர்சாமி, தேவகோட்டை. | 1.10 % அதிகம் |
| 2. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13ல் அமைந்துள்ள பெருமா கண்மாய் தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 9.90 | 1) திரு. K. மோஸஸ், காளையார்கோவில். | 0.08 % குறைவு |
| | | | 2) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 2.07 % அதிகம் |

**அலுவலக குறிப்பு: –**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 499– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 500

தேவகோட்டை நகராட்சியில் பொது நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 08.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–4, செப்பவயலார் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 6.00 | 1) கண்ணன் & கோ, தேவகோட்டை. | 0.09 % குறைவு |
| | | | 2) திரு. R. சரவணன், தேவகோட்டை. | 1.84 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–5, அருணகிரிபட்டிணம் தெற்கு பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.40 | 1) திருமதி. R. சரஸ்வதி, காரைக்குடி. | 0.05 % குறைவு |
| | | | 2) திரு. P. பொன்ராஜ், தேவகோட்டை. | 2.24 % அதிகம் |
| 3. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–13, காசிலிங்கம் நகர் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.70 | 1) திரு. K. பாலு, தேவகோட்டை. | 0.10 % குறைவு |
| | | | 2) திரு. M. அழகர்சாமி, தேவகோட்டை. | 1.40 % அதிகம் |
| 4. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–15, சத்தியமூர்த்தி தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.20 | 1) திரு. P. பொன்ராஜ், தேவகோட்டை. | 0.07 % குறைவு |
| | | | 2) திருமதி. R. சரஸ்வதி, காரைக்குடி. | 2.07 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 500– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 501

தேவகோட்டை நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு (2024–2027)– ஆண்டுக்கான பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி 07.03.2024ம் தேதியன்று நடைபெற்றது. இதில் இனம் எண்.12–ல், குறிப்பிட்டுள்ள பஸ்ஸ்டாண்ட் தெருவில் அமைந்துள்ள தினசரி மீன் மார்க்கெட் குத்தகை இனத்திற்கு கீழ்க்கண்டுள்ள இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளனர்.

| வ.எண். | பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | திரு.து.ராஜா த/பெ. துரைராஜ்,<br>13, புது வடக்குடியிருப்பு, முகமதியார்ப்பட்டிணம்,<br>தேவகோட்டை. | ரூ.7,10,000 /– |
| 2. | திரு.கரு.பாண்டித்துரை த/பெ.கருப்பையா,<br>சரஸ்வதி வாசக சாலை, தேவகோட்டை. | ரூ.7,05,000 /– |

திரு.து.ராஜா என்பவர் ரூ.7,10,000/–க்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேற்படி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.0178/2024/அ2,
**தீர்மானம் 501– அனுமதிக்கப்பட்டது.**

––

**(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**

**/உண்மை நகல் /**

**மேலாளர்,**
**தேவகோட்டை நகராட்சி**